بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 23/02/2024 அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

- ✪ **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்பான முன்னறிவிப்பின் சுருக்கமான குறிப்பு**
- ✪ **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் தகுதி, அந்தஸ்து ஆகியவைப் பற்றி அந்நியர்களின் கருத்துகள்**
- ✪ **பாக்கிஸ்தான், ஏமன் நாடுகளின் அஹ்மதிகளுக்காகவும் பலஸ்தீனத்திற்காகவும் துஆவுக்கான வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

இன்று முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்பான முன்னறிவிப்பின் சில அம்சங்களைக் குறித்து நான் எடுத்துரைப்பேன். ஒவ்வோர் அஹ்மதியும் அறிந்தது போன்று, இந்த முன்னறிவிப்பு நிறைவேறியதன் காரணமாக ஒவ்வோர் ஆண்டும் கூட்டங்களும் நடத்தப்படுவதுண்டு! இந்த முன்னறிவிப்பு 1886 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் தேதி செய்யப்பட்டதாகும். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு பல்வேறு பண்புகளைக் கொண்ட மகனுடைய பிறப்பைப் பற்றி செய்தி கொடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் இதைக் குறித்து கூறுவதற்கு முன்னர், பிள்ளைகளுக்கும் சில இளைஞர்களுக்கும் ஒரு கேள்விக்கான பதிலைக் கொடுக்க விரும்புகின்றேன். அந்தக் கேள்வி என்னவென்றால், நாம் பிறந்த நாளைக் கொண்டாடுவதில்லை; அவ்வாறிருக்கும்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் பிறந்த நாளை ஏன் கொண்டாடுகிறோம் என்பதாகும். இது பற்றி தெளிவுபடுத்த விரும்புவது என்னவென்றால், மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் அவர்களின் பிறந்தநாள் கொண்டாடப்படுவது கிடையாது! மாறாக முன்னறிவிப்பு நிறைவேறியதற்காக கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய பிறந்தநாள் 12 ஜனவரி 1889 ஆகும். முஸ்லிஹ் மவ்வூது முன்னறிவிப்பு என்றால் என்ன என்பது பற்றி பெற்றோர்கள் படித்து தெரிந்து கொண்டு குழந்தைகளுக்கும் கூற வேண்டும்; புரிய வைக்க வேண்டும்.

இது ஒரு மாபெரும் முன்னறிவிப்பாகும். இதைக் குறித்து முந்தைய ஏடுகளிலும் செய்தி காணப்படுகின்றது; முந்தைய நபிமார்களும் செய்தி அறிவித்துள்ளார்கள். பெருமானார் (ஸல்) அவர்களும் முன்னறிவித்துள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இதை அறிவிக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். இது ஒரு நீண்ட முன்னறிவிப்பாகும். இந்த முன்னறிவிப்பில் அந்த மகனுடைய தனிச்சிறப்புகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஓரிரண்டை நான் எடுத்துக் கூறுவேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ‘‘அவர் மிகவும் புத்திக் கூர்மை உள்ளவராகவும், நுண்ணிய அறிவுடையவராகவும் இருப்பார். மேலும் வெளிப்புறமான, உட்புறமான ஞானங்களால் அவர் நிரப்பப்படுவார். கைதிகளை விடுவிப்பதற்கு அவர் காரணமாக திகழ்வார்.’’

இது ஒரு நீண்ட முன்னறிவிப்பில் உள்ள சில விஷயங்கள் ஆகும். அல்லாஹ்விடம் இருந்து செய்தியைப் பெற்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய அந்த காலகட்டத்திற்குள் அந்த மகன் பிறந்ததை நாம் கண்டோம். முன்னறிவிப்பின் அனைத்து அம்சங்களுக்கும் உரியவராக அவர் திகழ்ந்தார். அதனுடைய எண்ணிக்கை 50, 52 ஆக இருக்கின்றது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் 52 ஆண்டு கால கிலாஃபத் காலகட்டத்தின் ஒவ்வொரு நாளும் இந்த முன்னறிவிப்பு நிறைவேறியதை மகத்துவத்துடன் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஜமாஅத்தினுடைய முன்னேற்றத்தின் ஒவ்வொரு நாளும் அதற்கு தெளிவான சான்றாக உள்ளது. இந்த முன்னறிவிப்பு தொடர்பாக, ஜமாஅத்துடன் எவ்வித தொடர்பும் இல்லாத, நீதியை விரும்பக்கூடிய மக்களுடைய சாட்சியங்களை நான் எடுத்துக் கூறுகின்றேன். மேலும், இந்திய துணை கண்டத்தில் அவர்கள் அறியப்படுகின்ற ஆளுமைகள் ஆவார்கள்.

**மவ்லானா குலாம் ரசூல் சாஹிப் மெஹர் என்பவர் ஓர் ஆய்வாளரும், எழுத்தாளரும், இலக்கியவாதியும், பத்திரிக்கையாளரும், வரலாற்றாசிரியரும் ஆவார். இவர் ஷேக் அப்துல் மாஜிது சாஹிப் அவர்களிடம்** (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது ரலி..., அவர்கள் குறித்து பேசும்போது), **‘**உங்களுடைய எந்த ஒரு நூலிலும் இந்த மகத்துவமிக்க மனிதருடைய சாதனைகளைப் பற்றிய முழுமையான தகவல்கள் கிடைப்பதில்லை! நாங்கள் அன்னாரை அருகில் இருந்து கண்டோம். பலமுறை சந்தித்துள்ளோம். முஸ்லிம் சமுதாயத்திற்கு அவர்களின் இருப்பு முழுக்க முழுக்க தியாகத்தைக் கொண்டதாக இருந்தது. பிரிவினை எனும் மத துவேஷத்தை அன்னாருடைய இருப்பில் பெயரளவுக்குக் கூட நான் காணவில்லை. அன்னார் நுட்பமான புத்தி கொண்டவராக இருந்தார்கள். அந்தோ பரிதாபம்! முஸ்லிம்கள் மிர்ஸா சாஹிப் அவர்களுக்கு மதிப்பளிக்கவில்லை! கடுமையான எதிர்ப்பின் புயல்கள் இருந்த போதிலும் மிர்ஸா சாஹிப் அவர்கள் மனச்சோர்வு அடைந்ததாகவோ, தளர்ந்து விட்டதாகவோ நான் ஒருபோதும் கண்டதில்லை**’** என்று கூறினார்.

**லாலா பீம் ஸைன் சாஹிப் அவர்களின் மகனான காஷ்மீருடைய முன்னாள் தலைமை நீதிபதி ஜனாப் லாலா க(ன்)வர் ஸைன் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் சொற்பொழிவான ‘உலக மொழிகளில் அரபி மொழியின் அந்தஸ்து’ பற்றி தம் கருத்தை வெளிப்படுத்தியவாறு தம் தலைமையுரையில் கூறுகிறார்கள்: ‘**இன்று நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு மிகவும் ஞானமிக்கதாகவும், தத்துவ ரீதியாக மகத்துவ மிக்கதாகவும் இருந்தது. இந்த சொற்பொழிவின் தாக்கம் நீண்ட காலம் வரை எனதுள்ளத்தில் நிலைபெற்று இருக்கும் என்று நான் நம்புகிறேன்.**’**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களோ உலகக் கல்வியைப் பொறுத்தவரையில் பிரைமரி கூட தேர்ச்சி பெறவில்லை. அல்லாஹ் வாக்குறுதி அளித்தது போன்று ஞானத்தால் அவன் அன்னாரை நிரப்பினான். இதை அந்நியர்களும் கூட புகழாமல் இருக்க முடியவில்லை.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கலீஃபாவாக ஆகி சில மாதங்கள்தான் ஆகியிருந்தன. அப்போது அமெரிக்காவிலிருந்து ஒரு மிகப்பெரும் பாதிரியார் காதியான் வந்திருந்தார்.** அவர் மார்க்கம் தொடர்பான சில கேள்விகளை எடுத்து வைத்து, **‘**நான் முஸ்லிம்களுடைய ஒவ்வொரு சபையிலும் இந்தக் கேள்விகளைக் கேட்டுள்ளேன். ஆனால் இன்றுவரை எந்த ஒரு மிகப்பெரிய முஸ்லிம் அறிஞராலும், தேர்ச்சி பெற்ற ஆலிமாலும் இந்தக் கேள்விகளுக்குத் திருப்தி அளிக்கின்ற வகையில் பதில் கொடுக்க முடியவில்லை**’**

என்று கூறினார். நான் இந்தக் கேள்விகளை உங்களுடைய கலீஃபாவுக்கு முன்னால் எடுத்து வைப்பதற்காக குறிப்பாக இங்கு வந்துள்ளேன் என்று கூறினார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மிகவும் அமைதியுடன் அந்த அனைத்துக் கேள்விகளையும் கேட்டார்கள். பிறகு உடனடியாக அதற்கு எவ்வாறான திருப்தி அளிக்கின்ற பதில்களைக் கொடுத்தார்கள் என்றால் அதைக் கேட்டுவிட்டு, 'நான் இன்றுவரை இவ்வாறான அறிவுப்பூர்வமான பதில்களை, சான்றுகளைக் கொண்ட கருத்தை எந்த ஒரு முஸ்லிமிடமிருந்தும் கேட்கவில்லை. உங்களுடைய கலீஃபா மிகப்பெரும் அறிஞராக உள்ளார்; மார்க்க உலகில் ஆழமான அகப் பார்வையுடையவராக அவர் இருப்பது தெரிகிறது' என்று கூறிவிட்டு மிகவும் பணிவுடன் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய கைக்கு முத்தம் கொடுத்து விட்டு திரும்பிச் சென்று விட்டார்.

**ரியாசத் எனும் பத்திரிக்கை லாகூரில் இருந்து வெளியானது. 1930 டிசம்பர் 2 ஆம் தேதியில் அதில் எழுதப்பட்டுள்ளதாவது;** மார்க்க வேறுபாடு தொடர்பான விஷயங்களை விட்டுப் பார்க்கும்போது, ஜனாப் பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுத்துக்களத்தில் செய்த பணி - அது அளவைப் பொறுத்த வரையிலும், பயனைப் பொறுத்தவரையிலும் எல்லா வகையிலும் பாராட்டுக்குரியதாக இருக்கின்றது!

**மவ்லானா முஹம்மது அலீ ஜவஹர் சாஹிப் என்பவர் தமக்கு ஏற்பட்ட தாக்கத்தைத் தம்முடைய ஹம்தர்த் எனும் பத்திரிக்கையில் 1927 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 இல் இவ்வாறு எழுதுகிறார்கள்:** ஜனாப் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மத் சாஹிப் மற்றும் அவர்களின் கட்டுக்கோப்பான ஜமாஅத் பற்றி இந்த வரிகளில் குறிப்பிடவில்லை என்றால் அது நன்றி கேடாக இருக்கும்! அவர்கள் தம்முடைய அனைத்து சிந்தனைகளையும் எவ்விதக் கொள்கை வேறுபாடுகளும் இன்றி அனைத்து முஸ்லிம்களின் நலனுக்காக அர்ப்பணித்திருந்தார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மத் சாஹிப் மற்றும் அவர்களுடைய ஜமாஅத் ஒருபுறம் முஸ்லிம்களுடைய அரசியலில் ஆர்வம் காட்டினார்கள் என்றால் இன்னொரு புறம் முஸ்லிம்களுடைய அமைப்பு, பிரச்சாரம் மற்றும் வியாபாரத்திலும் மிகவும் அதிக அளவில் ஈடுபாடு காட்டினார்கள். இஸ்லாத்தின் இந்த கட்டுக்கோப்பான பிரிவின் வழிமுறை இஸ்லாமிய அமைப்பிற்கு பொதுவான முறையில் வழிகாட்டியாக இருக்கின்ற அதே வேளையில், குவிமாடங்களில் அமர்ந்து கொண்டு இஸ்லாமிய தொண்டுக்கான முழக்கம் செய்யக்கூடிய, வெற்று வாதங்களை செய்யக்கூடிய மக்களுக்கு குறிப்பான முறையில் வழிகாட்டக் கூடியதாகவும் இருக்கும். அவ்வாறான நாள் வெகுதொலைவில் இல்லை!

**டாக்டர் அல்லாமா முஹம்மது இக்பால் சாஹிப் அவர்கள் தொடர்பாக இந்த விஷயங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1927 மார்ச் 24 ஆம் தேதி லாகூரில் ஒரு மாநாடு நடைபெற்றது. அல்லாமா இக்பால் சாஹிப் அவர்கள் அதற்கு தலைமை வகித்தார்கள்.** ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அங்கு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதற்குப் பிறகு அல்லாமா சாஹிப் இவ்வாறு கூறினார்கள்: ஞானங்களால் நிறைந்த இவ்வாறான சொற்பொழிவு வெகு காலத்திற்குப் பிறகு லாகூரில் கேட்க கிடைக்கிறது! குறிப்பாக திருக்குர்ஆனுடைய வசனங்களுக்கு மிர்ஸா சாஹிப் அவர்கள் மிகவும் சிறப்பான விளக்கத்தை வழங்கினார்கள். இந்த சொற்பொழிவில் இருந்து எனக்குக் கிடைத்த இன்பம் வீணாகி விடக்கூடாது என்பதற்காக நான் எனது சொற்பொழிவை நீண்டதாக ஆக்க விரும்பவில்லை.

**1919 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 'இஸ்லா(மியர்களிட)த்தில் தோன்றிய கருத்து வேறுபாடுகளின் ஆரம்பம்' என்ற தலைப்பில் லாகூரில் ஒரு கருத்துச் செறிவுள்ள சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். லாகூருடைய இஸ்லாமிய காலேஜினுடைய பிரின்சிபல் ஆக இருந்த செய்யது அப்துல் காதிர் சாஹிப் அவர்கள் தம் தலைமையுரையில்,** இந்த சொற்பொழிவு மிகவும் ஞானமிக்கதாக இருந்தது!

இஸ்லாமிய வரலாறு குறித்து எனக்கும் மேலோட்டமான அறிவே உள்ளது. முஸ்லிம் வரலாற்று ஆசிரியராக இருந்தாலும், முஸ்லிம் அல்லாத வரலாற்று ஆசிரியராக இருந்தாலும், மிகக் குறைவானவர்கள்தான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலகட்டத்தில் தோன்றிய கருத்து வேறுபாடுகளின் ஆழம் வரை சென்று புரிந்திருக்கிறார்கள்; அழிவை ஏற்படுத்திய உட்பூசல் நிறைந்த இந்தக் குழப்பமான போரின் அம்சங்களைப் புரிவதில் வெற்றி பெற்று இருக்கிறார்கள் என்பதை என்னால் வாதிட்டுக் கூற இயலும்! ஆனால் மிர்ஸா (பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மத்) சாஹிப் அவர்களோ இந்த உட்பூசல் நிறைந்த குழப்பமான விஷயங்களைப் புரிந்ததில் வெற்றி பெற்றது மட்டுமின்றி, மிகவும் தெளிவாகவும், தொடர்ச்சியான முறையிலும் அந்த சம்பவங்களை எடுத்துக் கூறியும் இருக்கிறார்கள். இவற்றின் காரணமாக கிலாஃபத் அமைப்பு நீண்ட காலம் வரை தடுமாற்றத்தில் இருந்து வந்தது. என்னைப் பொறுத்தவரை, இஸ்லாமிய வரலாற்றில் ஆர்வம் கொண்டுள்ள மக்களுடைய பார்வைக்கு முன், சான்று மிகுந்த இவ்வாறான கட்டுரை வந்திருக்க முடியாது!

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் டமாஸ்கஸில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது அல் இம்ரான் எனும் செய்தித்தாள் 1924 ஆகஸ்ட் 10 ஆம் தேதியில் 'டமாஸ்கஸில் மஹ்தி' என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டது. அதில்,** அன்னாரை மிகவும் ஆழமான ஆய்வு கொண்ட அறிஞராகவும், அனைத்து மார்க்கங்களைக் குறித்தும் அவற்றின் வரலாறு, தத்துவங்களைக் குறித்தும் ஆழமான அறிவு கொண்டவராகவும், இறை ஷரீஅத்துடைய நுட்பங்கள், தத்துவங்கள் ஆகியவற்றை அறிந்த ஆளுமையாக அன்னாரைக் கண்டதாகவும் எழுதியுள்ளது.

**மிகவும் பிரபல்யமான பத்திரிக்கையாளரும், அரசியல்வாதியுமான மியா(ன்) முஹம்மது ஷஃபீ என்பவர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் மரணத்தின் போது இவ்வாறு எழுதினார்கள்:** மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மத் சாஹிப் அவர்கள் கிலாஃபத்தின் சிம்மாசனத்தில் அமர்ந்த பிறகு எவ்வாறு தமது ஜமாஅத்தைக் கட்டுக்கோப்புடன் வழிநடத்தினார்கள் என்றால், சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவை நீண்ட காலம் பணியாற்றக்கூடிய, உயிரோட்டமான இயக்கமாக எவ்வாறு ஆக்கினார்கள் என்றால், அதன் மூலமாக அவர்களின் அளவற்ற நிர்வாக திறன்களைப் பற்றி அறிய முடிகிறது. அவர்களிடத்தில் எந்த ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டமும் இல்லை என்றாலும், அவர்கள் தனிப்பட்ட ரீதியில் கற்றறிந்து, அல்லாமா என்று அழைக்கப்படுவதற்குத் தகுதி கொண்டவராக தம்மை ஆக்கிக் கொண்டார்கள். மிர்ஸா சாஹிப் அவர்கள் ஒரு பண்பட்ட சொற்பொழிவாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தார்கள். எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் தாமதிக்காமல் பயன்படுத்திக் கொள்வார்கள். அதன் மூலமாக ஜமாஅத்தினுடைய முன்னேற்றத்தின் பாதைகள் திறந்து கொண்டே சென்றன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் பல்வேறு தலைப்புகளில் ஜமாஅத்துக்கும், முஸ்லிம்களுக்கும் பொதுவாக அறிவுரைகள், வழிகாட்டல்கள் வழங்கியுள்ளார்கள். நூல்களோ பல பெரும் தொகுதிகளைக் கொண்டவையாக உள்ளன. குத்பாக்கள் உள்ளன. பழைய record களில் அச்சடிக்கப்படாத குறிப்புகள் அல்லது குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகள் ஆகியவற்றிலிருந்து திருக்குர்ஆனுடைய விளக்கங்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அவையும் வெகு விரைவில் அச்சிடப்பட்டு வெளியிடப்படும் இன்ஷா அல்லாஹ்! பல நூல்கள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டு விட்டன. எவர்களுக்கு உருது தெரியாதோ அவர்கள் இந்த அறிவுக் கருவூலத்திலிருந்து பயன்பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் இந்த அறிவுக் கருவூலத்தில் இருந்து பயன்பெறக்கூடிய நல்வாய்ப்பை நம் அனைவருக்கும் வழங்குவானாக!

தற்போது பாக்கிஸ்தானில் ஜமாஅத்துக்கு எதிராக மீண்டும் எதிர்ப்பின் அலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேர்தலில் தோல்வியடைந்த அரசியல்வாதிகள் மற்றும் மவ்லவிகள் அல்லது தம்முடைய விருப்பத்திற்கேற்ப எவர்களுக்குத் தேர்தல் முடிவுகள் கிடைக்கவில்லையோ அவர்களுடைய பெரும் எண்ணிக்கை குழப்பத்தைப் பரப்புவதற்காக மீண்டும் அஹ்மதிகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. ஆகவே அஹ்மதிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய அதே நேரத்தில் துஆக்கள் மற்றும் சதக்காக்கள் ஆகியவற்றில் அதிக அழுத்தம் கொடுக்க வேண்டும். அல்லாஹ் அஹ்மதிகளைப் பாதுகாப்பானாக!

ஏமனுடைய அஹ்மதிகளுக்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள்! அல்லாஹ் அவர்களுக்கும் எளிதை உருவாக்குவானாக. அவர்களில் பலர் சிறை வாசத்தை அனுபவித்து வருகிறார்கள். அவர்களின் விடுதலைக்கான ஏற்பாட்டையும் விரைவில் செய்வானாக!

பாலஸ்தீனர்களுக்காகவும் துஆ செய்யுங்கள்! அல்லாஹ் அவர்கள் மீதும் கருணை காட்டுவானாக! பெரும் வல்லரசுகளின் அநீதிகளிலிருந்து அவர்களுக்கு இரட்சிப்பை வழங்குவானாக!

கானாவில் ஜமாஅத் ஏற்படுத்தப்பட்டு நூறாண்டுகள் நிறைவடைந்ததையொட்டி மாநாடு நடத்தப்படுகின்றது. எல்லா விதத்திலும் வெற்றி அடைவதற்காக துஆ செய்யுங்கள். நாளை இங்கிருந்து ஆண்டு மாநாட்டிற்காக நேரடியாக என்னுடைய சொற்பொழிவு இருக்கும் இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் எல்லா விதத்திலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**